# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை,** (Pension Pay Office **பின்புறம்**),

**நந்தனம், சென்னை– 600 035.** தொலைபேசி எண். 044-29515590

**ஆணை நாள் 11.06.2025**

**முன்னிலை**
**திரு.பி.தாமரைக் கண்ணன், இ.கா.ப.(ஓய்வு),**
**மாநில தகவல் ஆணையர்**

*****

## வழக்கு எண்கள். CP 296 /விசாரணை/E/2023

திரு தெ,சக்திவேல் .. மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/ .. பொது அதிகார அமைப்பு
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
திண்டுக்கல் மேற்கு வட்டம்,
திண்டுக்கல் மாவட்டம்

******

**ஆணை**

1) இவ்வாணையத்தின் 24.01.2025 நாளிட்ட உத்தரவில், தகவல் பெறும் உரிமை சட்டம் குறித்துரைத்தபடி உரிய காலத்தில் மனுதாரருக்கு தகவல் தராத பொதுத் தகவல் அலுவலர் யார் என்பது குறித்து திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்க வேண்டுமென கூறப்பட்டிருந்தது.

2) அதனை தொடர்ந்து, திண்டுக்கல் மேற்கு வட்ட சார் ஆய்வாளர் ஜெ.சந்தோஷ் 11.06.2025 அன்று ஆணையத்தில் ஆஜராகி திண்டுக்கல் மாவட்ட வருவாய் கோட்டாட்சியரின் அறிக்கையை ஆணையத்தில் தாக்கல் செய்தார். அவ்வறிக்கையில், ஆணையத்தின் உத்தரவு தொடர்பாக திண்டுக்கல் மேற்கு வட்ட தலைமையிடத்து துணை வட்டாட்சியர் 06.06.2025 தேதியிட்டு அளித்துள்ள அறிக்கையில், மனுதாரர் திரு சக்திவேல் சட்டப்பிரிவு 6(1)-ன் கீழ் மனு செய்தபோது, திண்டுக்கல் மேற்கு வட்ட தலைமையிடத்து துணை வட்டாட்சியர் பணியிடம் காலியாக இருந்தது என்று தெரிவித்துள்ளார் என்றும், அச்சமயம் பொதுத் தகவல் அலுவலர் பொறுப்பு பணிக்கு யாரையும் நியமனம் செய்யாத வட்டாட்சியர் மீது விளக்கம் கோரி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3) வழங்கப்பட்ட ஆவணங்களை இவ்வாணையம் பரிசீலித்தபோது. மனுதாரர் திரு சக்திவேல் சட்டப்பிரிவு 6(1)-ன் கீழ் மனு செய்தபோது, திண்டுக்கல் மேற்கு வட்ட தலைமையிடத்து துணை வட்டாட்சியர் பணியிடம் காலியாக இருந்தது என்றும், அச்சமயம் பொதுத் தகவல் அலுவலர் பொறுப்பு பணிக்கு யாரையும் நியமனம் செய்யாத வட்டாட்சியர்

மீது விளக்கம் கோரி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றும் திண்டுக்கல் மாவட்ட வருவாய் கோட்டாட்சியர் அளித்துள்ள விசாரணை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், திண்டுக்கல் மேற்கு வட்டாட்சியரிடம் விளக்கம் பெற்று அதை இவ்வாணையத்தில் 28.08.2025 அன்று நேரில் சமர்ப்பிக்க வேண்டுமென இன்று ஆஜரான பொதுத் தகவல் அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

**ஒம்/- (பி.தாமரைக் கண்ணன்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். CP 296 /விசாரணை/E/2023**

**பெறுநர்**

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
திண்டுக்கல் மேற்கு வட்டம்,
திண்டுக்கல் மாவட்டம்

வருவாய் கோட்டாட்சியர்,
திண்டுக்கல் வட்டம்,
திண்டுக்கல் மாவட்டம்

திரு தெ.சக்திவேல் த/பெ தெண்டபாணி தேவர்,
வேலுமணி காம்பவுண்டு,
சுப்புராயர் தெரு, 4வது வீதி,
காந்தி நகர் அஞ்சல்,
திருப்பூர் - 641 603

Copy to: File
CR/PA